**செய்தி வெளியீடு எண்: 205** **நாள்: 23.03.2018**

தமிழ்நாடு கடலோரப் பகுதிகளில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த சாத்திய கூறு உள்ள பகுதிகளில் பாதுகாப்பு படையினர் மற்றும் நுண்ணறிவுப்பிரிவினரின் தயார் நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக சாகர் கவாச் (Sagar Kavach - கடற்கவசம்) என்றழைக்கப்படும் கடலோரப் பாதுகாப்பு ஒத்திகையானது 13 தமிழக கடலோர மாவட்டங்களில் 22.03.2018 காலை 06.00 மணி முதல் 23.03.2018 மாலை 18.00 மணி வரை மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பயிற்சியில் இந்திய கடலோரப் பாதுகாப்பு படை, இந்திய கப்பற்படை, மத்திய தொழில் பாதுகாப்பு படை, நுண்ணறிவுப்பிரிவினர், சுங்கத்துறை, வனத்துறை, மீன்வளத்துறை, குடியுரிமை துறை, இந்திய எண்ணை மற்றும் எரிவாயு ஆணையம், துறைமுகங்கள், உள்ளிட்ட மத்திய மாநில அரசுசார் ·நிறுவனங்களோடு தமிழக கடலோரப் பாதுகாப்புக் குழுமம் மற்றும் மாநில காவல் துறையினர் என சுமார் 10,000-த்திற்கும் மேற்பட்ட அலுவலர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்கள் ஈடுபட்டனர். இப்பயிற்சி நோக்கத்தினை சிறப்பானதாகவும் பயனுள்ளதாகவும் வெற்றிகரமாக நடத்தி முடிக்கவும் மேற்கண்ட அரசு நிறுவனங்களோடு பல்வேறு நிலைகளில் பல கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டு திட்டமிடப்பட்டது அதன்படி சிறப்பு கட்டுப்பாட்டு அறைகள் தலைமைச்செயலகம், கடலோர மாவட்டங்கள், இந்திய கடலோர காவல் படை, கடலோரப் பாதுகாப்புக் குழுமம் தலைமையகங்களில் தனியாக இப்பயிற்சிக்கென செயல்படும்படி அமைக்கப்பட்டு உடனுக்குடன் தகவல்கள் சேகரிக்கப்பட்டு அந்தந்த மாவட்டங்களுக்கும் அமைப்புகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. கடலோரப் பாதுகாப்புக் குழும, கூடுதல் காவல் துறை இயக்குநர் இந்த ஒத்திகை பயிற்சிக்கான ஒருங்கிணைப்பாளராக மாநில அரசின் சார்பாக செயல்பட்டார்.

பாதுகாப்பு படைகளைச்சேர்ந்த பாதுகாவலர்கள் ஒரு பிரிவாக பிரிக்கப்பட்டு அவர்கள் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைப் போல கடல் வழியாக தமிழக நிலப்பகுதியில் ஊடுருவி பாதுகாக்கப்பட்ட முக்கியத்துவமாய்ந்த பொதுத்துறை நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் வழிபாட்டுத்தலங்கள் மத்திய அரசு நிறுவனங்கள், மக்கள் அதிகமாக புழங்கும் சந்தைப்பகுதி வணிக வளாகங்கள் பள்ளி கல்லூரிகள் ஆகிய பகுதிகளில் வெடிகுண்டு வைத்தல், பொதுமக்களை அச்சுறுத்துகிற கலவரப்படுத்துகிற நடவடிக்கைகளில் இறங்குதல், முக்கிய தலைவர்கள் மற்றும் பொதுமக்களையும் அரசு வாகனங்கள் மற்றும் கப்பல்களைக் கடத்துதல், கடத்தி பிணைய கைதிகளைப் பிடித்துவைத்தல் போன்ற தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் வகையில் திட்டமிடப்ட்டு அனுப்பிவைக்கப்பட்டனர். அவர்களை எதிர் கொண்டு தீவிரவாத நடவடிக்கைகளை முறியடிக்கும் வண்ணம் இந்திய கடற்படை, கடலோரக் காவல் படை, கடலோரப் பாதுகாப்புக் குழுமம் கடலோர மாவட்டங்களைச் சார்ந்த காவலர்கள் மற்றும் சுங்கவரி துறைமுகங்கள் இடப்பெயர்வு துறை அலுவலர்கள் மற்றும் சார்நிலைப் பணியாளர்கள் காவலர்கள் என சுமார் 10000க்கும் மேற்ப்பட்டோர் தேவையான கப்பல்கள் படகுகள் ஹெலிக்காப்டர்கள் இடைமறிக்கும் படகுகள் கரையோரம் ஓடும் வாகனங்கள் என 1000திற்கு அதிகமான ஊர்திகளோடு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

தீவிரவாத செயல்களில் ஈடுபடுவதற்கென நியமிக்கப்பட்டு தமிழக கடலோரப் பகுதிகளில் பல்வேறு இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட காவலர்களில் 28 இடங்களில் இடைமறிக்கப்பட்டு 107 நபர்கள் பிடிக்கப்பட்டு பாதுகாப்பு துறையினரின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டனர் அவர்கள் சென்னை மாநகரத்தில் 10 இடங்களிலும், காஞ்சிபுரம் 03 திருவள்ளுர் 01 நாகபட்டினம் 04 இராமநாதபுரம் 03 தூத்துக்குடி 04 இடங்களில் என்று நாசகாரவேலைகளில் ஈடுபட திட்டமிட்டிருந்தனர் இவ்வாறு வந்தவர்களின் 15 குழுவினர் கடற்பகுதிக்குள்ளேயே மடக்கப்பட்டனர் அவ்வாறு இடைமடக்கப்பட நிகழ்வுகள் 17 சம்பவங்கள் மாநகர, மாவட்ட காவல்துறையினராலும் 09 இடங்களில் கடலோரக் காவல் குழும காவல் துறையினராலும் 02 இடங்களில் ஒருங்கிணைந்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

துறைமுகங்கள் மட்டும் கடற்பகுதிகளில் கப்பல்களின் பாதுகாப்பினை பரிசோதிக்கும் வகையில் MV Samuthira Kaustubh-எனும் கப்பல் இன்று 22.03.2018 காலை 08.00 மணிக்கு தீவிரவாதிகளால் கடத்தப்பட்டது உடனே சம்மந்தப்பட்ட சென்னை துறைமுக அதிகாரிகள் கடலோரக் காவல் படையினர் இந்திய கப்பல் படையினர் சுங்கத்துறையினர் சென்னை மாநகர காவல் துறையினர் மற்றும் கடலோரக் காவல் குழும படையினர் என அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து கடத்தல்காரர்களிடமிருந்து கப்பலை மீட்பதற்கான நிர்ணயிக்கப்பட்ட செயல் முறை திட்டங்களின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கடத்தல்காரர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி கப்பலை மீட்கும் நடவடிக்கைகளில் முழுமையாக ஒத்திகை பார்க்கப்பட்டது. தேவையான உதவிகளை தீயணைப்புத்துறை மருத்துவத்துறை மொழிபெயர்ப்பாளர் உளவியல் நிபுணர் ஆகியோரிமிருந்து பெறப்பட்டது.

மேற்கண்ட பயிற்சியின் காரணமாக இந்திய கடல்சார் பாதுகாப்புக்கென பொறுப்பாக உள்ள மைய அரசு நிறுவனங்கள் மாநில அரசு பாதுகாப்பு காவல் துறையினர்களுக்கும் இடையேயான தொடர்பு தகவல் பரிமாற்றம் ஒருங்கிணைந்த செயல்பாடு ஆகியவைகள் குறித்து ஒரு இக்கட்டான அச்சுறுத்தலான இந்திய பாதுகாப்பினை குலைக்கும் வகையிலான சூழ்நிலைகளை கையாளுவதற்கு பாதுகாப்பு அமைப்புகள் எந்த அளவிற்கு தயார் நிலைகளில் உள்ளன எனபது குறித்தும் மேற்படி பாதுகாப்பு பணியில் ஈடுபடும்போது மீனவர்கள் மற்றும் பொதுமக்களுடைய ஒத்துழைப்பை எவ்வாறு பெற்று பயன்படுத்துவது என்பது குறித்தும் நடைமுறையில் பரிசோதிக்கப்பட்டு உறுதிபடுத்தப்பட்டது பயிற்சியின் போது பொது மக்களும் கடலோர கிராம மக்களும் பிற அரசு துறை நிறுவனங்களும் பெருமளவில் ஒருங்கிணைந்து செயல்புரிந்து உதவி புரிந்திருக்கிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**